**அக்டோபர் – 21**

# TNPSC துளிகள்

- இந்தியக் கடற்படையானது விசாகப்பட்டினத்தில் இந்தோனேசிய இருதரப்பு கடல்சார் பயிற்சியான 5வது "சமுத்திர சக்தி–2025" என்ற பயிற்சியினை நடத்துகிறது.
- பார்வைத் திறனற்றோர் மற்றும் பார்வைத் திறன் குறைபாடு உள்ளோரின் சுதந்திரம், இயக்கம்/நடமாட்டம் மற்றும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 15 ஆம் தேதியன்று உலகப் பார்வைத் திறனற்றோர் கைத்தடி (வெண்பிரம்பு) தினம் அனுசரிக்கப்படுகிறது.
- சோப்பு மற்றும் தண்ணீரில் கை கழுவுதல் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கச் செய்வதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 15 ஆம் தேதியன்று உலகளாவிய கை கழுவுதல் தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Be a Handwashing Hero!" என்பது ஆகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நிதியியல் பொறுப்புகள் (திருத்தம்) மசோதா, 2024 மீதான மறுபரிசீலனை


- 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதியியல் பொறுப்புகள் (திருத்தம்) மசோதாவினை அவை மறுபரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்த ஆளுநர் R.N. ரவியின் நிலைப்பாடானது தமிழ்நாடு சட்டமன்றத்தினால் "நிராகரிக்கப்பட்டது".
- அதே மசோதாவை அவையானது எந்த மாற்றங்களும் இல்லாமல் மீண்டும் ஏற்றது.
- வருவாய்ப் பற்றாக்குறை சுழியமாகவும் நிதிப் பற்றாக்குறை 3% என்ற நிலையையும் அடைவதை (தற்போது முறையே 2026-27 மற்றும் 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகள்) மற்றொரு ஆண்டிற்கு ஒத்தி வைக்க இந்த மசோதா முயல்கிறது.
- இது 2021-22 முதல் 2025-26 ஆம் ஆண்டு வரை என்ற இலக்குகளை நிர்ணயித்துள்ள, பதினைந்தாவது நிதி ஆணையத்தினால் குறிப்பிடப்பட்ட காலத்தையும் விஞ்சுகிறது.

### *ஆளுநரின் கருத்துகள்*

- தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான அடுத்த பொதுத் தேர்தல் தற்போதிலிருந்து ஓராண்டிற்குள் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட இத்திருத்தம் தற்போதைய ஆட்சிக் காலத்திற்கு அப்பால் மற்றும் வரவிருக்கும் அரசாங்கத்தின் மீது அதன் நிதிக் கொள்கைத் தேர்வுகளை முதலாம் ஆண்டு பதவிக் காலத்திலேயே திறம்பட்ட வகையிலான பிணைப்பினை ஏற்படுத்தும் என்பதால் அதன் பதவிக் காலத்திற்குள்ளேயும் நேரடியாகச் செயல்படும்.
- இது பதினைந்தாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைக்கப்பட்ட காலத்தையும் விஞ்சுகிறது.
- ஒரு பாராளுமன்ற ஜனநாயகத்தில், சட்டரீதியான மாற்றத்தின் மூலம் முக்கிய கொள்கை முடிவுகள், குறிப்பாக நீண்ட கால நிதிக் கொள்கைத் துறையில், கட்டாயத் தேவை இல்லாவிட்டால் தவிர, தேர்தலுக்கு முந்தைய உடனடி காலக் கட்டத்தில் வழக்கமாக தவிர்க்கப்படுவது நன்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு மரபு ஆகும்.
- புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசாங்கம் ஆனது மக்களிடமிருந்து புதிய ஆணையின் அடிப்படையில் அதன் சொந்த நிதிக் கட்டமைப்பைத் தீர்மானிக்கும்

சுயாட்சியைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதே இதன் நோக்கம் ஆகும்.

- ❖ தமிழ்நாடு நிதிப் பொறுப்புச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் ஆனது, நிதியியல் பொறுப்புகள் மற்றும் நிதி ஒதுக்கீடு மேலாண்மைச் (FRBM) சட்டம், 2003 மற்றும் அடுத்தடுத்த நிதி ஆணைய பரிந்துரைகளின் கீழ் நிதியியல் சீர் முறைக்கான தேசியக் கட்டமைப்பிற்கு ஏற்ப இயற்றப்பட்டன.
- ❖ ஆனால் முன்மொழியப்பட்ட திருத்தமானது ஆணையத்துடன் ஒப்புக் கொள்ளப்பட்ட செயல் திட்டத்தினைத் திறம்பட மாற்றியது.
- ❖ இது நிதி ஆணையம் போன்ற அரசியலமைப்பு அமைப்புகளால் வரையறுக்கப்பட்ட இலக்குகளுடன் நீண்டகால நிதி நிலைத் தன்மை மற்றும் இணக்கத்தை அச்சுறுத்தும் மற்றும் மாநிலத்தின் நிதி நிர்வாகத்தின் நம்பகத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.
- ❖ நிதியியல் பொறுப்புச் சட்டங்கள் பிணைக்கப்பட வேண்டும், மேலும் விதிவிலக்குகள் பொதுவாக அசாதாரண சூழ்நிலைகளில் (இயற்கைப் பேரழிவுகள், கடுமையானப் பொருளாதார நெருக்கடிகள் போன்றவை) தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தினால் மட்டுமே செய்யப்படுகின்றன.




## தமிழ்நாடு கடன்-GSDP விகிதம் 2025

- ❖ இந்தியாவின் தலைமை கணக்காளர் (CAG) அலுவலகம் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசை மதிப்பிட்டுள்ளது.
- ❖ தமிழக அரசில், நிதி சார் குறிகாட்டிகளின் பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட மூன்று

இலக்குகளில் ஒன்றில் மட்டுமே முன்னேற்றம் பதிவாகியது.

- மாநிலத்தில் பதிவான முன்னேற்றம் ஆனது நிலுவையில் உள்ள கடன்-மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) விகிதத்தில் பதிவானது.
- 29.1% என்ற இலக்குக்குப் பதிலாக, இந்த விகிதமானது அந்த ஆண்டில் 28% ஆகக் குறைக்கப்பட்டது.
- வருவாய், நிதி மற்றும் முதன்மை பற்றாக்குறைகள் ஆகிய மூன்று நிதி அளவுருக்களில் ஒவ்வொன்றிற்கும் பின்வரும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன.
    - 2025-26 ஆம் ஆண்டிற்குள் வருவாய்ப் பற்றாக்குறையை நீக்குதல்,
    - 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் நிதிப் பற்றாக்குறை (FD)-மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) விகிதத்தை 3% ஆக அடைதல், மற்றும்
    - கடன்-GSDP விகிதத்தை 29.1% ஆகக் குறைத்தல்.

**State of finances** Compliance with provisions of TNFR Act*

| Fiscal Parameters | Fiscal targets set in the Act/MTFP** projection | ACHIEVEMENT 2019-2020 | 2020-2021 | 2021-2022 | 2022-2023 | 2023-2024 |
|---|---|---|---|---|---|---|
| Gross State Domestic Product (GSDP) at current prices (₹ in crore) | | 17,43,144 | 17,88,074 | 20,72,496 | 23,93,364 | 27,21,571 |
| Revenue Deficit (-) / Surplus (+) (₹ in crore) | Eliminate Revenue Deficit by 2025-26 | (-) 35,909 | (-) 62,326 | (-) 46,538 | (-) 36,215 | (-) 45,121 |
| Fiscal Deficit (-)/ Surplus (+) (as percentage of GSDP) | Reduce fiscal deficit to 3 per cent of GSDP by March 2025 | (-) 60,179 (3.45%) | (-) 93,983 (5.26%) | (-) 81,835 (3.95%) | (-) 81,886 (3.46%) | (-) 90,430 (3.32%) |
| Total outstanding liability*** (₹ in crore) | | 4,24,447 | 5,13,223+ | 5,97,573+ | 6,79,554+ | 7,62,006+ |
| Ratio of total outstanding liability to GSDP (in per cent) | 29.10% | 24.35% | 28.70% | 28.83% | 28.39% | 28% |

**Tamil Nadu State Fiscal Responsibility and Budget Management Act*
***Medium Term Fiscal Plan*
**** The total outstanding liabilities include Public Debt, Off Budget Borrowings and Public Account Liabilities*
*+ The back-to-back loans of ₹8,095 crore during 2021-22 and ₹6,241 crore during 2020-21 received from the Government of India in lieu of Goods and Services Tax (GST) compensation have not been considered debt for working out the indicator*

- 2019-20 முதல் 2023-24 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் இருந்த போக்குகள் குறித்து CAG அறிக்கை வெளியிட்டது.
- 2019-20 ஆம் ஆண்டில் 24.35% ஆக இருந்த கடன்-GSDP விகிதம் ஆனது 2021-22 ஆம் ஆண்டில் 28.83% ஆக அதிகரித்தது.
- இது 2022-23 ஆம் ஆண்டில் 28.39% ஆக ஓரளவு குறைக்கப்பட்டு, 2023-24 ஆம் ஆண்டில் 28% ஆக இருந்தது.
- இந்தக் கடனில் நிதிநிலை அறிக்கைக் கணக்கின் வரவு சாராக் கடன் வாங்குதலும் (OBB) அடங்கும்.
- சரிவுகள் இருந்தபோதிலும், 2023-24 ஆம் ஆண்டில் FD-GSDP விகிதம் 3.32% ஆக இருந்தது.
- இது தமிழ்நாடு மாநில நிதியியல் பொறுப்பு மற்றும் நிதிநிலை மேலாண்மை சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப் பட்ட இலக்கை விட "மிக அதிகமாக" இருந்தது.
- GSDP சதவீதமாகக் குறிப்பிடப் படும் வருவாய்ப் பற்றாக்குறையானது, 2023-24 ஆம் ஆண்டில் முந்தைய ஆண்டை விட 0.15% அதிகரித்துள்ளது.
- வருவாய்ப் பற்றாக்குறையானது 36,215 கோடி ரூபாயிலிருந்து (2022-23) 45,121 கோடி ரூபாயாக (2023-24) உயர்ந்தது.

- 2025-26 ஆம் ஆண்டிற்குள் அதை நீக்குவதை இலக்காக இருந்த நிலையில், இது நடுத்தர கால நிதித் திட்டக் கணிப்புகளை விட சுமார் 71.5% அதிகமாகும்.


## சிறைச்சாலையில் தயாரிக்கப்படும் பொருட்கள் மூலமான வருவாய்

- சிறைச்சாலையில் தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனையிலிருந்து வருவாய் ஈட்டுவதில் தமிழ்நாடு மாநிலம் இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.
- மொத்த விற்பனை வருவாயில் அதிக மதிப்பை ஈட்டியதாக மாநில அரசு அறிவித்து உள்ளது.
- இலாபகரமான சிறைச்சாலை தயாரிப்பு வணிகத்தில் தமிழ்நாடு நாட்டில் முன்னணியில் இருந்தாலும், தெலுங்கானா மற்றும் கேரளா ஆகியவை 2023 ஆம் ஆண்டில் முறையே 55.71 கோடி ரூபாய் மற்றும் 24.44 கோடி ரூபாயுடன் முன்னணியில் இருந்தன.
- தேசியக் குற்றப் பதிவு வாரியத்தின் தரவுகளின் படி, ஒரு கைதியினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மதிப்பு தெலுங்கானாவில் அதிகபட்சமாக 95,187 ரூபாயாகவும், அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (33,984 ரூபாய்) மற்றும் சண்டிகர் (32,325 ரூபாய்) ஆகவும் உள்ளன.
- தயாரிப்பு செயல்பாடுகளில் ஈடுபடும் கைதிகளுக்கு அவர்களின் திறன்களின் அடிப்படையில் இயல்பான ஊதியம் வழங்கப்படுகிறது.
- தமிழ்நாடு திறமையான தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 300 ரூபாய் மற்றும் பகுதியளவு திறம் வாய்ந்த தொழிலாளர்களுக்கு 270 ரூபாய் வழங்குகிறது.
- மாநில அரசின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களின் ஒரு பகுதியாக, சிறைத் துறையில் ஜவுளி, தோல், அலுமினியம், மெழுகு மற்றும் காகிதப் பொருட்களைத் தயாரிப்பதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டன.
- எட்டு மத்திய சிறைச்சாலைகள், ஒரு பெண்களுக்கான சிறப்பு சிறைச்சாலை மற்றும் ஒரு சீர்திருத்தப் பள்ளி ஆகியவற்றில் இந்த வசதி நிறுவப்பட்டுள்ளது.
- சிறைச்சாலையில் தயாரிக்கப்படும் பெரும்பாலான பொருட்கள் அரசுத் துறைகளால் வாங்கப்பட்டாலும், சிறைச்சாலைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை அனைத்து மத்திய சிறை வளாகங்களிலும் 'சிறைச்சாலை கடை/பஜார்களை' அமைத்து, பொது மக்களுக்கு சிறைகளில் தயாரிக்கப்படும் பொருட்களை மிகவும் குறைந்த விலையில் விற்கிறது.
- ஆயத்த ஆடைகள், தோல் பொருட்களால் ஆன காலணிகள், மழைக் கவச உடைகள், அடுமனை/பேக்கரிப் பொருட்கள் மற்றும் சோப்புகள் போன்ற பொருட்கள் 'Freedom' என்ற தயாரிப்பு பெயரில் விற்கப்படுகின்றன.
- இலாபத்தில் 20% என்பது தயாரிப்பை உருவாக்க உழைத்த கைதியின் கணக்கில் வரவு வைக்கப் படுகிறது.
- மீண்டும் மீண்டும் குற்றம் புரிவதைக் குறைப்பதற்கும், முதல் முறை குற்றவாளிகளை (18-24 வயதுடையவர்கள்) சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைக்க உதவுவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட ஆளுமை மனப்பான்மை மாற்ற சிகிச்சை உதவி மேலாண்மை (PATTAM) திட்டம் எதிர்ப்பார்க்கப்பட்ட பலன்களை வழங்கியுள்ளது.
- தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டங்கள்/பட்டயப் படிப்புகளைப் பெறவும், அரசு செலவில் தேர்வுகளை எழுதவும் சிறைவாசிகள் அனுமதிக்கப் படுகிறார்கள்.
- சிறைச்சாலைகளில் காணொளி வழிக் கலந்தாய்வுகளிலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

- நாட்டில் உள்ள 1,332 சிறைகளுள், 1,156 சிறைகளில் இந்த வசதி செய்யப் பட்டுள்ளது.
- இம்மாநிலத்தில் உள்ள 126 சிறைகளில் காணொளி வழி கலந்தாய்வு வசதி உள்ளது, அதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம் (123), இராஜஸ்தான் (92), ஒடிசா (84) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (80) ஆகியவை உள்ளன.




## கோயம்புத்தூரில் செயற்கை நுண்ணறிவு பயிற்சி நிறுவனம்




- தமிழ்நாடு அரசானது, பொது-தனியார் கூட்டாண்மை மாதிரியின் கீழ் கோவையில் செயற்கை நுண்ணறிவுக்கான ஒரு சிறப்பு மையத்தை அமைக்க உள்ளது.
- கோயம்புத்தூர் நகரில் தற்போது 1,592 பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் உள்ளன என்பதோடு அவை மொத்தம் 37 மில்லியன் அமெரிக்க டாலர்களை துணிகர

முதலீட்டு நிதியாகப் பெற்றுள்ளன.

❖ பள்ளி அளவில் செயற்கை நுண்ணறிவு கல்வி அறிமுகப்படுத்தப்படும் என்பதோடு மேலும் மாநிலம் முழுவதும் துணிகர மூலதன ஆதரவுடன் AI மையங்கள் உருவாக்கப் பட்டு வருகின்றன.

❖ இந்த நிறுவனம் ஆனது AI அடிப்படைகள், இயந்திரக் கற்றல், தரவு அறிவியல், AI நெறிமுறைகள் மற்றும் பயன்பாட்டு AI ஆகியவற்றில் கலப்பு முறையிலான கற்றல் மாதிரி மூலம் பயிற்சி அளிக்கும்.

## கௌரவக் கொலைகளுக்கு எதிரான சட்டம்




❖ சாதி அடிப்படையிலான வெறுப்பு ரீதியாக இழைக்கப்படும் குற்றங்கள் மற்றும் ஆணவ/கௌரவக் கொலைகளுக்கு எதிரான சட்டத்தை பரிந்துரைக்க ஓர் ஆணையத்தை அமைக்க உள்ளதாக தமிழக முதல்வர் அறிவித்தார்.

❖ இந்த ஆணையத்திற்கு ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி K. N. பாஷா தலைமை தாங்க உள்ளார்.

❖ இந்த ஆணையம் ஆனது அரசியல் குழுக்கள், சட்ட வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களை கலந்தாலோசிக்கும்.

❖ சாதி அடிப்படையிலான மற்றும் கௌரவம் தொடர்பான வன்முறைகளைத் தடுக்க ஒரு சட்டத்தை வரைவதே இதன் நோக்கமாகும்.

# தேசியச் செய்திகள்

## CCSCH குழுவின் 8வது அமர்வு

❖ அசாமின் கௌஹாத்தியில் கோடெக்ஸ் குழுவின் (CCSCH) 8வது அமர்வை இந்தியா வெற்றிகரமாக நடத்தியது.

❖ பெரிய ஏலக்காய், வெண்ணிலா மற்றும் கொத்தமல்லி ஆகியவற்றிற்கான மூன்று புதிய கோடெக்ஸ் தரநிலைகள் அமர்வின் போது முடிவு செய்யப்பட்டன.

- இந்த மூன்றையும் சேர்த்ததன் மூலம், கோடெக்ஸ் தற்போது மஞ்சள், மிளகு, சீரகம் மற்றும் குங்குமப்பூ உள்ளிட்ட 19 நறுமண/மசாலாப் பொருட்களுக்கான உலகளாவிய தரநிலைகளை இறுதி செய்துள்ளது.
- கோடெக்ஸ் உணவூட்டப் பொருட்கள் ஆணையத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் நறுமண மற்றும் சமையல் சார்ந்த மூலிகைகளுக்கான கோடெக்ஸ் குழு நிறுவப்பட்டது.
- இது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகியவற்றின் கூட்டு அமைப்பாகும்.
- நறுமணப் பொருட்கள் வாரியம் அறிவியல் சார்ந்த உள்ளீடுகளை ஒருங்கிணைத்தது, செயல்பாட்டு ஆவணங்களைத் தயாரித்து, கோடெக்ஸ் நடைமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்தது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## நிலையான பொருளாதார வளர்ச்சி கொண்ட 10 முன்னணி நாடுகள் 2025

- நியூசிலாந்தின் மூன்று ஆண்டு கால முன்னணித்துவத்தினை முடிவுக்குக் கொண்டு வந்து 2வது இடத்திற்கு தள்ளப்பட்டதன் மூலம் 2025 ஆம் ஆண்டில் ஐக்கியப் பேரரசு இப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகியவை முறையே 3வது மற்றும் 4வது இடங்களில் தங்கள் இடங்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன.
- இந்தியா 100 மதிப்பெண்ணுக்கு 33.2 மதிப்பெண்களுடன் ஒட்டுமொத்தமாக 23வது இடத்தைப் பிடித்தது.
- 10 முன்னணி நாடுகளின் இடங்கள் மாறாமல் உள்ளன.
- உலகளாவிய வர்த்தக அமைப்பில் பொருளாதார வளர்ச்சி, சமூக உள்ளடக்கம் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றுக்கு இடையேயான பன்முக இயக்கவியல்

அடிப்படையில் 30 நாடுகளை இது பகுப்பாய்வு செய்தது.

| Rank | Economy | STI Score | Economic Pillar | Societal Pillar | Environmental Pillar |
|---|---|---|---|---|---|
| 1 | UK | 100 | 86.45 | 89.42 | 100 |
| 2 | New Zealand | 97.01 | 77.26 | 92.72 | 98.95 |
| 3 | Australia | 93.26 | 80.26 | 100 | 79.97 |
| 4 | Singapore | 90.01 | 99.51 | 86.63 | 66.56 |
| 5 | South Korea | 87.22 | 95.84 | 84.47 | 65.93 |
| 6 | Hong Kong, SAR | 83.79 | 100 | 65.49 | 72.78 |
| 7 | Japan | 83.48 | 67.81 | 78.54 | 91.21 |
| 8 | Canada | 80.45 | 74.4 | 96.75 | 59.38 |
| 9 | United States | 79.54 | 94.07 | 67.71 | 66.64 |
| 10 | Taiwan | 77.9 | 75.23 | 80.55 | 68.84 |
| 23 | INDIA | 33.2 | 60 | 23.4 | 37.4 |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★